# அறிவொளி

அரசு உயர் நிலை பள்ளி
சின்னக்கானல்

# அறிவொளி



# லிட்டில் கைட்ஸ் மாணவர்கள்




| | | | |
|---|---|---|---|
| பரத்.D | சந்துரு.M | எபினேசர்.X | ஜோதிபாசு.J |
| பிரதாப்.E | ராஜேஷ்.M | ரமேஷ்.A | மஞ்சு.V, |
| ஆர்த்தி.S | தர்ஷ்னி.T | அனுசுயா.K | சத்தியராஜ்.M |
| நித்யா.T | ரம்யா.R | ராஸ்மீனா.B | ஸ்ரீதேவி.R |
| வினோதா.S | யோக ஸ்ரீ.R | மதன் குமார்.M | ஸ்ரீஜித் மணி.M |

# பதிப்புரை

குழந்தைகளின் மனதின் சிந்தனைகளின் படைப்புகள், சிதறிய யோசனைகளின் முன்னேற்றத்தின் ஒரு படி முன் நோக்கி..... இவைகள் லிட்டில் கைட்ஸ் பத்திரிக்கையின் வழியாக

ஆசிர்வதியுங்கள்

# உள்ளடக்கம்


- பழமொழிகள்
- இயற்கை
- மலை
- இணைகோடுகள்
- ஒட்டை குடம்
- மழைநீா் சேகரிப்பு
- எனது பள்ளியின் இயற்கை அழகு

# பழமொழிகள்

*எல்லோரும் பல்லக்கு எறினால் பல்லக்கை யார் துாக்குவது

*காற்றடிக்கும் திசையை வைக்கோல் காட்டி விடும்.

*ஊரான் வீட்டுச் சோற்றைப் பார் பானை போன்ற வயிற்றைப் பார்.

*உழைப்பு உடலைப் பலப்படுத்தும்,கஷ்டம் மனதைப் பலப்படுத்தும்.


*இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்கு குலை அறுப்பான்

இவண்

அனுசுயா.குமார்

அறிவொளி

# இயற்கை



சத்தியராஜ்


# மலை



பச்சை பசையென
கண்காணும் தூரம்
வரை.......
பார்த்திருக்கும் மலையே
உயர்ந்து நிற்கும் மலையே.....
ஊசியாய் நிற்கும் மலையே
ஊர் எங்கும் உன் முகமே.....
அனைவரும் பார்த்து இரசிக்க
காட்சித் தரும் மலையே......
அழகு அழகாய் எங்கும்
காணும் மலையே.......
என் வாழ்வில் தோன்றிய
மலைப் பரிசே......
அழகாய் இருக்கும்
இந்த உலகத்திற்கே
அழகு தரும் மலையேs

sridevi.Ramar

# இணை கோடுகள்




இணையான இரண்டு கோடுகள[i]
இனியன் வெட்டினான் குறுக்காக
உருவாகும் எட்டு கோணங்களில்
உள்ளதாம் விந்தை குறிப்புகளே.....

எதிர் எதிர் உள்ள கோணங்கள்
எதிர் கோணம் என்று சொல்லப்படும்
எதிர் கோணம் என்றும் அளவு தனில்
சரியாய் சமமாய் இருந்திடுமே....

இரண்டு கோணங்களின் கூட்டுத்தொகை
என்றும் நூற்றி என்பதாகும்
என்ற உண்மை தெரிந்திட்டால்

அறிவோம் அவையும் வரை ஜோடி.....

ஒத்த கோணங்கள் சமமாகும்
ஒன்று விட்டதும் சமமாகும்
உள்வெளி கோணங்கள் மிகைநிரப்பான்
உண்மை தெரியுமா உங்களுக்கு.....

ஒவ்வொரு கோணத்தின் இடமறிந்து
கொடுப்போம் பெயரை சரியாக
என்றும் அற்றைப் பாடி நாமும்
உயர்வோம் உயர்வோம் உயர்வோமே.....



G.Bella
PD Teacher
GHS Chinnakanal

# ஓட்டை குடம்




ஒரு பாட்டிக்கு இரு குடங்கள் இருந்தது . அதில் ஒரு குடத்தில் ஒரு துவராம் இருந்தது. தினமும் பாட்டி அதில் வெகு தூரத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வருவது வழக்கம் . ஓட்டையுள்ள குடத்திலுள்ள தண்ணீர் ஒழுகுவதால் வீட்டிற்குப் போய் சேரும் போது கொஞ்சம் தண்ணீர் தான் இருக்கும். தினமும் நல்ல குடம் ஓட்டைக் குடத்தைப் பார்த்து கேலி செய்து சிரிக்கும். அதனால் வருத்தப்பட்ட குடம் பாட்டியைப் பார்த்து என்னை எனக்கே பிடிக்கவில்லை என்று கூறி அழுதது. பாட்டி சிரித்துக் கொண்டே நீ வரும் வழியில் உன் குடத்திலிருந்து ஒழுகிய தண்ணீரில் வளர்ந்துள்ள செடிகளில் பூப் பூத்துள்ளது. அதைத் தான் நான் தினமும் கடவுளுக்கு வைக்கிறேன் என்று கூறினார்.ஓட்டைப் குடமும் மகிழ்த்து.

இவண், வினோதா.

11 G HSS Chinnakanal

# மழைநீர் சேகரிப்பு

## "மழைத்துளி மனிதனின் உயிர்த் துளி"

முன்னுரை;

நாம் வாழ்வதற்கு மிக முக்கியமானது தண்ணீர் ஆகும். தண்ணீர் மிக முக்கியமான ஒன்று. உயிர் அனைத்து பறவைகள், உயிரினங்கள், செடிகள், கொடிகள் மற்றும் மரங்களுக்கும் தண்ணீர் முக்கியம் தண்ணீர் இல்லை எனில் உயிர் இல்லை.

பொருளுரை;

நமக்கு கடவுள் தந்த வரங்களில் ஒன்று இயற்கை ஆகும். மிக சுத்தமான நீர் மழைநீர் ஆகும். மழைநீரை நாம் யாரும் வீணக்காமல் இருக்க வேண்டும்.

நீரின் இன்றிமையாமை

நீர் இந்த உலகத்திற்கு இன்றிமையாமை. மனிதனுக்கு நீர் முக்கியமான ஒன்று. அனைத்து பறவை , விலங்கு , உயிரினம் போன்றவைகளுக்கு நீர் இன்றிமையாதவை ஆகும். மனிதர்கள் அந்த ஆண்டு பிறப்பு முதல் இறப்பு

வரை அனைவருக்கும் தேவையான ஒன்று நீர் ஆகும்.

மழைநீர் சேகரிப்பு

மழைநீரை அனைவரும் சேகரிக்க வேண்டும். மழைநீரை சேகரித்தால் பின் வரும் காலங்களில் பயன்படும் . மரங்கள் இல்லாவிட்டால் யாருக்கும் தண்ணீர் கிடைக்காது. மழை தண்ணீர் விலை மதிக்க முடியாத புதையல் ஆகும்.

சேமிப்பின் அவசியம்

பின் காலகட்டத்தில் தண்ணீர் குறைய நிறைய வாய்ப்புகள் உள்ளது. நாம் இந்த காலகட்டத்தில் இருந்து மழைநீரை சேமித்தால் பின் காலகட்டத்தில் உதவும். தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. அனைவரும் தண்ணீரை வீணாக்கக் கூடாது.

சேகரிக்கும் வழிகள்

மழைநீரை சேகரிக்க வழிகளில் ஒன்று, வீட்டிற்குப் பின்னால் தொட்டிக் கட்டுதல். பிறகு கிணறு தொண்டுதல், விவசாய நிலங்களில் சேமித்து வைத்தல். நாம் அனைவரும் மழைநீரை சேகரிக்க வேண்டும்.

உயிர்த் துளி

மனிதனின் உயிர்த் துளி தண்ணீர் ஆகும். நீர் இல்லை

என்றால் மனிதனின் உயிர் இல்லை. விண்ணின் மழைத் துளி மண்ணின் உயிர்த் துளி. அந்த வானம் அழுதால் தான் இந்த பூமி சிரிக்கும்.

முடிவுரை;

மழை தான் உயிர்களை வாழவைக்கிறது. மழையை மண்ணிற்கு வர வைப்போம். மரம் வளர்ப்போம் மழை பெறுவோம். உயிர் வாழுவதற்கு முக்கியமான ஒன்று தண்ணீர் ஆகும் . தண்ணீர் இல்லாவிட்டால் மனிதனின் உயிர் இல்லை.

இவண்

தர்ஷினி.



அறிவொளி

# எனது பள்ளியின் இயற்கை அழகு





# அறிவொளி





16 G HSS Chinnakanal

அறிவொளி



அறிவொளி

நன்றி



லிட்டில் கைட்ஸ் மாணவர்கள்

